DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 239/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : திரு.தங்கதுரை |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.02.2015ம் தேதி 11.30 மணிக்கு நான் சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக நிலையப்பொறுப்பில் இருந்தபோது முருகேசன் என்பவர் நிலையம் ஆஜராகி தனது வீட்டின் பீரோவில் வைத்திருந்த சுமார் 18 பவுன் தங்க நகைகளும், சட்டைப்பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.670ம் திருடுபோய்விட்டதாக தெரிவித்து புகார் மனு ஒன்று அளித்தார். அந்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையகுற்ற எண்.24/2015 ச/பி. 457, 380 இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன் அசல் மற்றும் புகார் மனுவை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் ஒரு

நகலை விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்பந்தாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

புகார்தாரருக்கு திருடுபோன சம்பவம் பற்றி எப்போது தெரியவந்ததாக அவர் அளித்த புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 08.02.2015ம் தேதி அதிகாலை 5.30 மணிக்கு திருடுபோன சம்பவம் பற்றி தெரியவந்ததாக புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. புகார்தாரரின் ஊர் செந்தட்டி என்றால் சரிதான். மேற்படி செந்தட்டியிலிருந்து சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்திற்கு வர எவ்வளவு நேரம் ஆகும் என்றால் சுமார் 1 மணி நேரத்திற்கு மேல் ஆகும். செந்தட்டிக்கும் சின்னகோவிலான்குளம் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 12 கிமீ துாரம் இருக்கும். புகார் மனு காவல்நிலையத்தில் எப்போது வந்து கொடுக்கப்பட்டது என்றால் 08.02.2015ம் தேதி காலை 11.30 மணிக்கு புகார் மனு காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டது. திருட்டு சம்பவம் தெரிந்ததிலிருந்து சுமார் 5 மணி நேரம் கழித்து புகார் மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியதுபோல புகார் மனு எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றாலும், எதிரிக்கு எதிராக முறையாக விசாரணை செய்யாமல் பொய்யாக வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**